2. தகவல் கோரல்

(அ) வெளி மார்க்கெட்டில் அரிசி விலையைக் குறைக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரிசி விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு எங்கும் வெளி மார்க்கட்டில் அரிசி விலை அதிகமாக இருக்கிறது. அதையெல்லாம் கட்டுப்படுத்தும் முறையில் அரசால் ஒரு சில இடங்களில் ரூ. 4, ரூ. 4-50-க்கு தமிழ் நாட்டிலே அரிசி விநியோகிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ்நாடு பூராவிலும் சூப்பர் மார்க்கெட், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசியை விநியோகிப்பதன் மூலம் வெளி மார்க்கட்டில் விலையைக் கட்டுப்படுத்த முடியுமே, அதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே, பொது மார்க்கெட்டிலே அரிசியினுடைய விலையை வியாபாரிகள் வேகமாக உயர்த்திக்கொண்டே போனார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக வெளி மாநிலங்களிலிருந்து ஒரு ஐ.ஏ. எஸ். அதிகாரி தலைமையில் குழு அமைத்து அரிசியை ஒரு நியாயமான விலைக்கு வாங்கி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்க முடியுமா என்பதை பரிசீலிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அதன்படி, கூட்டுறவுப் பதிவாளர் தலைமையில் ஐவர் குழு ஒன்று அமைத்து, பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி, அங்கே உள்ள கூட்டுறவு இலாகா அதிகாரிகளோடு கலந்து பேசி, 15 தினங்களுக்கு ஒரு முறை 5,000 டன் அரிசியை கூட்டுறவு அங்காடிகள் மூலமாக—ஒரு கிலோ அரிசி ரூ. 4.50—லிருந்து ரூ. 4.60—க்கு மேல் விற்காத அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இப்போது தமிழகத்தில் சுமார் 1,000 கடைகளில் டி.யு.சி.எஸ்., சிந்தாமணி, அமுதம் அங்காடிகள், காமதேனு போன்ற கடைகளில் 1,000 இடங்களில் இப்படி ஒரு நியாயமான விலையிலே அரிசி விற்பதற்கான நடவடிக்கைகளை கூட்டுறவுத் துறை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் தமிழகத்தில் உள்ள 21,000க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகளிலே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கோள்ள வேண்டுமென்றால்—முதலில் அதற்குத் தேவையான பணம் வேண்டும்—இரண்டாவது தேவையான அரிசியும் வேண்டும். இருந்தாலும் கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அமுலாக்க படிப்படியான வகையில்—இப்போது 1,000 கடைகளில் ஆரம்பிக்கப்பட்

டிருக்கிற வியாபாரத்தை விரைவில் 2,000, 3,000 என்று விஸ்தரிக்கலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, வியாபாரிகள் அதிக லாபம் சம்பாதிக்காமல் ஒரு நியாயமான விலையில் விற்க அவர்கள் முன் வருவார்களானால் கூட்டுறவுத் துறையின் நடவடிக்கை இதோடு நிற்கும். இல்லையென்றால் வியாபாரிகள் இந்த அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களானால்—அரசாங்கம் எல்லா இடங்களிலும் அரிசி விற்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மணலி உரத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு வேலை மறுப்பு.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மணலியில் உள்ள உரத் தொழிற்சாலையில் 1,400 காண்ட்ராக்ட் தொழிலாளர்கள், கடந்த ஜூன் மாதம் முதல் வேலை மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அண்மையிலே இது பற்றி தொழிலாளர் நல இணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தையிலே முறிவு ஏற்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தையிலே முறிவு ஏற்படுவது என்பது சகஜமான ஒன்றுதான் என்றாலும், இதிலே ஒரு சிக்கலான பிரச்சினை இருக்கிறது.

அந்த காண்ட்ராக்ட் தொழிலாளர்கள், ஒப்பந்தக்காரர்களின் கீழே வேலை செய்கிறவர்கள். அந்த ஒப்பந்தக்காரர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பிரின்சிபல் எம்ப்ளாயர் என்கிற முறையில் மத்திய பொதுத்துறை நிறுவனமான சென்னை, உரத்தொழிற்சாலை ஒப்பந்தக்காரர்கள் வேலை தர முன்வந்தாலும், அதற்கு இசைவு தர மறுக்கிற காரணத்தால்—அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதில் உயர்நீதிமன்றங்கூட தலையிட்டு, அவர்கள் வேலை செய்யக்கூடிய இடங்களில், மாற்றுப் பணியாளர்களைப் புதிதாக நியமிக்கக் கூடாது என்று ஒரு தடையை விதித்திருக்கிறது. அந்த வழக்கை தொழிற்சங்கம் வாபஸ் பெற வேண்டும் என்று பிரின்சிபல் எம்ப்ளாயர்—சென்னை உரத் தொழிற்சாலை—வலியுறுத்துகிறது. தொழிற்சங்கமும் அந்த வழக்கை வாபஸ் பெறத் தயாராக இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறது. முதலில் 1,400 பேருக்கு வேலை கொடுக்க முடியாது—ஒரு சிலருக்குத்தான் கொடுக்க முடியும் என்ற நிலை அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் அந்த பிரின்சிபல் எம்ப்ளாயர் ஒத்துழைப்பு தராத காரணத்தால் இந்தப் பேச்சுவார்த்தையிலே முறிவு ஏற்பட்டு, அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி இசைவு மறுக்கிற அந்த பிரின்சிபல் எம்ப்ளாயருக்கு எதிராக அந்த ஆலையின் வாயிலிலே ஆர்ப்பாட்டம் நடத்தவோ—